நாள்: 09.07.2025

O.S. No. 70/2022

**வா.சா.1**

**பெயர்: இளங்கோவன், த/பெ. சண்முகம்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நான் பிறந்த ஆண்டு என்னவென்றால் 1969 ஆகும். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டபோது எனக்கு 6 வயதிருக்கும் என்றால் சரிதான். என் தாத்தா அரியபத்தரபிள்ளை ரயில்வே ஊழியர் என்றால் சரிதான். என் தாத்தா 1972-ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் தாத்தா இறப்பிற்கு பிறகு மேற்படி ரயில்வேயிடமிருந்து ஓய்வு பணப்பலன்கள் எதுவும் கிடைத்ததா என்றால் என் தாத்தா பணியிலிருக்கும்போதே இறந்துவிட்டார். எனக்கு அப்போது 6 வயதிருக்கும் என்பதால் இறப்பிற்கு பின்பு கிடைக்கப்பெற்ற பலன்கள் குறித்து எனக்கு தெரியாது.

2) என் தகப்பனாருக்கு கருணை அடிப்படையில் ரயில்வே பணி கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. அவர் 1967-லேயே பணியில் சேர்ந்து விட்டார். தாவா சொத்துக்களை என் தாத்தாவின் வருமானத்திலிருந்து பெறப்பட்டது என்றால் இல்லை. 1980-ல் என் அம்மா நித்யகல்யாணி பெயரில் என் அப்பா சண்முகம் கிரயம் பெற்றார். தாவா சொத்துக்கள் குடும்ப வருமானத்திலிருந்து மூத்தவர் என்பதால் என் தகப்பனார் பெயரில் கிரயம் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

3) தாவா சொத்துக்கள் கிரயம் பெறும்போது 4, 5 வாதிகளுக்கு 5, 6 வயதிருக்கும் என்றால் சரிதான். 4-ம் வாதி ரவி எப்போது பிறந்தார் என்றால் 1974-ல் பிறந்தார். வா.சா.ஆ.1 கிரய ஆவணம் பதிவு செய்யப்பெறும்போது 4 ம் வாதிக்கு 1 வயது தான் என்றால் சரிதான். நானும் என் சகோதரர் 4 ம் வாதி ரவியும் வேலைக்காக சிங்கப்பூர் சென்று வந்துள்ளோமா என்றால் 2003 முதல் பணிக்கு சென்று வந்துள்ளோம். தற்போது பணி முடிந்து நிரந்தரமாக ஊரில் தங்கிவிட்டோம்.

4) தாவா சொத்துக்களுக்கான கிரயம் ஆவணம் என் பாட்டி சுந்தரம்பாளிடம் இருந்து வந்தது என்றால் சரிதான். அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. தாவா சொத்துக்களை பொறுத்து 1980-ல் என் தகப்பனாருக்கும் அவரது உடன் பிறந்த சகோதரரான 1 ம் பிரதிவாதிக்கும் இடையே வாய்மொழி பாகப்பத்திரம் ஏற்பட்டது

குறித்து தெரியுமா என்றால் இல்லை. தாவா கிராமத்தில் தரப்பினர்களிடையே மத்தியஸ்தம் செய்த பாலசுப்பிரமணியன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பாலசுப்ரமணியன் பொது நபர் அல்ல. 1ம் பிரதிவாதியின் நெருங்கிய நண்பர். எனக்கும், மேலும் மத்தியஸ்தம் செய்யததாக சொல்லப்படும் செல்வராஜ், நடராஜபிள்ளை, வேதநாயகம்பிள்ளை மற்றும் பாலசுப்ரமணியன் ஆகியோர்களுக்கும் எனக்கும் இடையே விரோதம் எதுவும் உண்டா என்றால் இல்லை. மேற்படி செல்வராஜ் மின்சார வாரியத்தில் பணி செய்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான்.

5) குடும்ப சொத்தான தேவர்கண்டநல்லூர் கிராமத்திலுள்ள புல எண்.78/4-ல் முன்புறத்திலுள்ள பூர்வீக வீட்டில் நான் தற்போது வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி வீடு 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு மேற்குபுறம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடு வடக்குபார்த்த வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு கீழ்புறமுள்ள வாய்க்கால் வரையிலான பகுதி 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்திக்கு ஒதுக்கப்பட்ட பகுதி என்றால் சரியல்ல.

6) நான் குடியிருந்து வரும் புல எண்.78/4-க்கும் அதன் கீழ்புறம் 1ம் பிரதிவாதி குடியிருந்து வரும் வீட்டிற்கும் பதிவு ஆவணங்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். கோவில் நிலம் என்பதால் பதிவு ஆவணங்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. மேற்படி நானும், பிரதிவாதி தரப்பும் 1980 முதல் தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 1980 முதல் அவரவர் பகுதியில் வசித்து வருவதால் அவரவர் வசித்து வரும் பகுதி அவரவருக்கு சொந்தம் என்றால் சரிதான்.

7) 1980-ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை அனுசரித்து திருமதிகுன்னத்தில் உள்ள சொத்தினை என் தகப்பனாருக்கும், தாவா சொத்தினை 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. திருமதிகுன்னத்தில் உள்ள சொத்து என் தகப்பனார் சுயசம்பாதித்தில் கிரயம் பெற்ற சொத்தானும். தாவா சொத்து 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து என்றால் இல்லை. அது என் தகப்பனார் கிரயம் பெற்ற சொத்தாகும். என் தகப்பனார் கிரயம் பெற்றதாக சொல்லப்படும் தாவா புல எண்.57/1-ல் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம் பெற்றார் என்றால் 100 குழியாகும்.

//குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.//

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.07.08 16:34:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.